(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் நின்று கொண்டிருந்தனர். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் இரண்டாவது தீர்மானம் குறித்து, முரசொலி, இதிலிருந்து விடுவிக்கப்படுகிறதா அல்லது House as a whole தலையங்கத்தின் மூலமாக அவைக்கு ஒட்டுமொத்தக் களங்கமும், அவைத் தலைவருக்குக் களங்கமும், அவை உரிமைக் குழுவிற்கு களங்கமும் கற்பித்த இந்து நாளிதழ் தலையங்கத்தை மறு வெளியீடு செய்த முரசொலிக்கு உரிய தண்டனை எந்நிலை என்ற விளக்கத்தைக் கேட்கிறார் என்று கருதுகிறேன். அந்த 15 நாட்கள் தண்டனை எப்படி இந்து பத்திரிகைக்குப் பொருந்துமோ அதுவே முரசொலிக்கும் பொருந்தும் என்றுதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2003), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2003) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@6-11-2003 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்* வெளியிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு முன்வரிசைத் தலைவர்கள், திரு. துரைமுருகன், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தயவுசெய்து அமருங்கள். தயவுசெய்து அமருங்கள். இல்லாவிட்டால் வெளியேற்ற வேண்டிய நிலை வரும். அவைக் காவலர்களை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலை வரும். தயவுசெய்து அமருங்கள்.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் - தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *38/2003*) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

(ஊ) தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003* ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *39/2003*), மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.